# கோவை அமிர்தா பல்கலை கழகத்திற்கு யுனெஸ்கோ அமைப்பு அங்கீகாரம்



கோவை, நவ 4

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை அதிகாரம் பெறச்செய்தல் குறித்த இந்தியாவில் முதன்முறையாக யுனெஸ்கோ கல்வி இருக்கை செயல்திட்ட மையமாக அம்ரிதா பல்கலைக்கழகத்தை ஐக்கிய நாடுகள் சங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அம்ரிதா பல்கலைக்கழக வேந்தர் மாதா ஸ்ரீ மாதா அம்ரிதானந்தமயி தேவி அவர்களின் ஆன்மிக நிகழ்ச்சி பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற்றது. 8,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இவ்விழாவில், யுனெஸ்கோவின் பல்கலைக்கழக இருக்கை தொடங்கப்படுவதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களில் யுனெஸ்கோவுக்கான இந்தியத்தூதரும் மற்றும் அதன் நிரந்தர பிரதிநிதியுமான ருச்சிரா காம்போஜ் மற்றும் யுனெஸ்கோ உயர்கல்விப்பிரிவு தலைவர் டாக்டர். பீட்டர் வெல்ஸ் ஆகியோர் உள்ளடங்குவர். அம்ரிதா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். பி. வெங்கட் ரங்கன் அப்பல்கலைக்கழகத்தின் சார்பில் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை டாக்டர் வெல்ஸிடம் வழங்கினார். அம்ரிதா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். பி. வெங்கட்ரங்கன் கூறுகையில், "பாலின சமத்துவம் அண்டு பெண்களை ஆற்றல் பெறச்செய்தல் குறித்து இந்தியாவில் ஒரு பல்கலைக்கழக இருக்கை அர்ப்பணிக்கப்பட்டு நிறுவப்படுவது இதுவே முதல்முறையாகும். மிகவும் முன்னேறிய நாடுகளிலும்கூட இது போன்ற அர்ப்பணிப்பு முனைப்பு நடவடிக்கைகள் மிகவும் ஒரு சிலவே உள்ளன. தன்னுடைய சமூக மற்றும் மனிதாபிமானப் பணிதளில் இந்த முக்கிய பிரிவுக்கு அம்மா மிகவும் அதிக முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்திருப்பதை பிரதிபலிக்கிறது. வரும் நான்காண்டுகளில், இந்தியாவில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதிப்புத்தன்மைகளை நாங்கள் அடையாளம் கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு வழிகள் காண்போம். இது முன் எப்போதும் இல்லாத மிகப் பெரிய பணியாகும். பாதுகாப்பு, கல்வி மற்றும் திறன் வளர்ப்பு, சமூக மற்றும் பண்பாட்டுச்சூழல், பருவநிலை மாற்றம், பேரிடர் ஆபத்து இடையூறுகள் மற்றும் சுகாதாரம் மற்றும் துப்புரவு விளைவாக பாதிப்புத் தன்மை "கண்டறிதலில் முனைப்பு செலுத்தப்படும்." என்றார்.